<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்</u>

<u>முன்னிலை திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி,</u>

<u>2026ம் வருடம் மார்ச் திங்கள் 26ம்நாள் வியாழக்கிழமை</u>

<u>அசல் வழக்கு எண். 111/2012</u>

<u>CNR Number : TNMD15-000277-2012</u>

--------

திருமதி. மல்லிகா ... வாதி

/எதிர்/

1) பழனியப்பன்.
2) பாண்டி (எ) மார்க்கண்டன் ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 11.03.2026ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.P.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. ரேணுகா தேவி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

இந்த வழக்கானது தாவா வழக்கிடைச் சொத்தில் வாதிக்குரிய 1/3 பாகம் கிடைக்கும் காலம் வரை வாதிக்குரிய சொத்தை வேறு யாருக்கேனும் விற்பனை செய்யாமல் இருக்க, ஒரு நிரந்தர தடை உறுத்துக்கட்டளை வழங்க வேண்டியும், வாதிக்குரிய 1/3 பாகம் கிடைக்க உத்தரவிட வேண்டியும் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :–</u>

2.1) தாவா சொத்துக்கள் அனைத்தும் காலஞ்சென்ற சுப்பன் செட்டியார் மற்றும் அவரது தகப்பனாருக்குப் பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துக்கள் ஆகும். சுப்பன் செட்டியார் காலமாகிவிட்டார். சுப்பன் செட்டியாரின் முதல் மனைவி முத்துக்கருப்பி என்பவரை திருமணம் செய்து கொண்டு வாழும்போது, குழந்தைகள் ஏதும் உண்டாகவில்லை. பின்பு, காலஞ்சென்ற சுப்பன் செட்டியார் ராஜாமணி என்பவரை 2ம் தாரமாக திருமணம் செய்து கொண்டு வாழும்பொழுத இவ்வழக்கின் வாதியும் மற்றும் பிரதிவாதிகளும் சட்டப்படியான குழந்தைகளாக பிறந்தார்கள். தற்சமயம் சுப்பன் செட்டியார், அவரது முதல் மனைவி முத்துக்கருப்பி மற்றும் வாதி, பிரதிவாதிகளின் தாயார் ராஜாமணி அம்மாள் ஆகியோர் காலமாகிவிட்டார்கள். காலஞ்சென்ற சுப்பன் செட்டியார், அவரது இரண்டாவது மனைவி இராஜாமணி ஆகியோர் காலமானபோது, இந்த பிராதில் பிற்பாடு, விவரமாக சொல்லப்படும் சொத்துக்கள் அனைத்தையும் மூவருக்கும் பாத்தியப்பட்டது என்ற நிலையில் எந்தவிதமான பாகப்பிரிவினையும் செய்யாமல் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான தனிப்பட்ட வகை சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யாமல், காலமாகிவிட்டார்.

2.2) மேற்படி, சுப்பன் செட்டியார் மற்றும் இராஜாமணி ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகள் வாதியும், பிரதிவாதிகளும் ஆகும். மேற்படி, மூவருக்கும் இதுவரை எந்தவிதமான சட்டப்படியான பாகப்பிரிவினையும் செய்யவில்லை. இவ்வழக்கின் வாதிக்கு திருமணம் ஆகிவிட்டது. இரண்டு பிரதிவாதிகளும் திருமணம் செய்து கொண்டு குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வழக்கின் முதல் பிரதிவாதி குடும்ப தலைவர் என்ற முறையில் மேற்படி, சுப்பன் செட்டியார் காலமான பின்பு, இந்து வாரிசுரிமை சட்டப்படி கர்த்தா என்ற நிலையில், மேற்படி, மூவருக்கும் பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும், தனது பெயரில் பெற்றுக் கொண்டு,

இவ்வழக்கின் வாதியும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள். மேற்படி, வாதியும், பிரதிவாதிகளும் இந்த பிராதில் சொல்லப்படும் சொத்துக்கள் அனைத்தையும் முழுவதுமாக கூட்டாக அனுபவித்து வந்ததாலும், வாதியை மோசம் செய்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் 1ம் பிரதிவாதி செயல்பட்டு வருகிறார். தாவா சொத்துக்களின் பட்டா 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளதால், இவ்வழக்கின் வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தெரியாமலும், வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் சேர வேண்டிய உரிய பாகத்தை கொடுக்காமலும், வாதியை மோசம் செய்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிக்கு தெரியாமல், 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை வாதியின் சம்மதம் இல்லாமல் விற்பனை செய்து, வாதியை ஏமாற்ற முயற்சி செய்து வருகிறார்.

2.3) இவ்வழக்கின் வாதி தாவா 1ம் பிரதிவாதியைப் பார்த்து தாங்கள் மற்றும் 2ம் பிரதிவாதிகளும் ஆக மூவரும் கூட்டாக அனுபவித்து வரும் பொதுச் சொத்தை 1ம் பிரதிவாதி யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்றும், தங்களுக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்குமாறு பலமுறை நேரடியாகவும், பஞ்சாயத்தார்கள் மூலமாகவும் கேட்டபொழுது, இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி, வாதிக்கு எந்தவிதமான பாகமும் தர முடியாது என்று சொல்லியும், மேலும், தாவா சொத்திலிருந்து எந்தவிதமான வருமானமும் தர முடியாது என்று சொல்லியும், வாதியின் கோரிக்கையை நிராகரித்தும் வாதிக்கு எந்தவிதமான பாகமும் தரமுடியாது என்று சொல்லிவிட்டார். அதேபோல், இதுவரை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்குரிய பாகத்தையும் கொடுக்கவில்லை தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி, வாதிக்கு தெரியாமல் கிரையம் கொடுப்பது தெரிந்து, தாவா சொத்து பூர்வீக சொத்துக்களாக உள்ளதாலும், வாதி மற்றும் இரு பிரதிவாதிகளும், ஆக மூவரும் கூட்டாக அனுபவித்து வருவதும் மேற்படி, மூவருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை வேறு யாருக்கேனும் விற்பனை அழிமானம் செய்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில்,

தினத்தந்தி நாளிதழில் கடந்த 14.11.2008ம் தேதியிட்டு ஒரு பொது அறிவிப்பு ஒன்று வாதியின் சார்பாக கொடுக்கப்பட்டது. இவ்வழக்கின் முதல் பிரதிவாதிக்கு, தாவா சொத்து வாதிக்குரிய பாகத்தைக் கேட்டு, கடந்த 03.11.2008 அன்று வாதியின் சார்பாக 1ம் பிரதிவாதிக்கு வழக்குரைஞர் மூலம் ஒரு சட்டப்படியான அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேற்படி, அறிவிப்பினை 04.11.2008ல் பெற்றுக் கொண்ட 1ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் கடந்த 14.11.2008 அன்று ஒரு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

2.4) வாதி தினத்தந்தி நாளிதழில் 14.11.2008 அன்று கொடுத்த பொது அறிவிப்பு விளம்பரமும், இந்த வழக்குடன் தாக்கல் செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி இதுவரை வாதிகள் மற்றும் 2 பிரதிவாதிகளுடன் எந்தவிதமான, முறையான பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை. எனவே, இந்து வாரிசுரிமைச் சட்டப்படி இந்நீதிமன்றம் மூலம் பிரதிவாதிகளும், வாதியும் உரிய பாகப்பிரிவினை செய்ய வாதிக்கு உரிய பாக உரிமை கேட்டு இந்த பிராது தாக்கல் செய்யப்படுகிறது. வழக்கைப் பொருத்தமட்டில் வாதிக்கு தகுந்த முகாந்திரம் (Prima facie) உள்ள வழக்காகும்.

2.5) மேலும், கடந்த 01.02.2012 அன்று இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியைப் பார்த்து வாதி தனக்குரிய பாகத்தை தருமாறுக் கேட்டபொழுது, வாதி சொத்துக்கள் 1ம் பிரதிவாதி அத்துமீறி நுழைந்து தான் பாகம் ஏதும் தர முடியாது என்று சொல்லி, தாவா சொத்தை விற்க விலை பேசிக் கொண்டு இருந்தார். மேலும், 1ம் பிரதிவாதி அடியாட்களுடன், வாதியை தாக்க எத்தனித்தார். வாதிக்குரிய பங்கையும், 1ம் பிரதிவாதி விற்றுவிடுவார் என்று பயந்து பஞ்சாயத்தார் மூலம் கேட்டார். பஞ்சாயத்திற்கு 1ம் பிரதிவாதி கட்டுப்பட முடியாது. தெரிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். உடனே வாதி 02.02.2012ம் தேதியில் மேலவளவு காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்தார். மேற்படி, மேலவளவு காவல் துறையினர் இவ்வழக்கு சிவில் வழக்காக இருப்பதால்,

உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, தக்க பரிகாரம் பெற்றுக் கொள்ள சொல்லிவிட்டதால், இந்த பிராது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதிக்குரிய பாகத்தை இந்நீதிமன்றத்தின் மூலம் பிரித்துக் கொடுக்க வாதிக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க வாய்ப்பில்லை.

2.6) மேலும், இந்த தாவா சொத்துக்களை வாதிக்குரிய பங்கையும் சேர்த்து 1ம் பிரதிவாதி வேறு யாருக்கேனும் விற்றுவிடாமல் இருக்கவும், ஈடோ, ஒத்தியோ, அல்லது இச்சொத்துக்களின் பேரில் கடனோ, அல்லது கிரையப்பத்திரமோ, கிரைய ஒப்பந்த பத்திரமோ அல்லது வேறு எந்த வகையிலும் வேறு யாருக்கேனும் உரிமம் கொடுக்காமல் இருக்கவும், ஒரு நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் வாதிக்குரிய 1/3 பாகம் கிடைக்க உத்தரவாகவும், முதல்நிலை தீர்ப்புரையும், தீர்ப்பாணையும் வேண்டி இவ்வழக்கு வாதி சார்பாக தாக்கல் செய்யப்படுகிறது.

<u>3. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

3.1) வாதியின் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை. வாதிக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதில்லை. இதனடியிற் வியக்தமாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் வாதியே கண்டிப்பாய் நிரூபணம் செய்ய வேண்டியது.

3.2) பிராது 4(1) பாராவில் கண்டுள்ள விஷயங்கள் உண்மையல்ல. ஆட்சேபிக்கப்படுகின்றன. பிராதில் துலக்கியிருக்கும் சொத்துக்கள் இந்தப் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பன் செட்டியாருக்கு பூர்வீகப் பாத்தியப்பட்டதல்ல. சொத்துக்கள் முழுமையும் மேற்படி சுப்பன் செட்டியாரும், அவருடைய மனைவி முத்துக்கருப்பாயிக்கும் தங்களுடைய கடுமையான உழைப்பின் மூலம் சம்பாதிக்கப்பட்ட சுயார்ஜித சொத்துக்களாகும். சுப்பன் செட்டியாருக்கு முத்துக்கருப்பாயி மூலம் வாரிசுகள் ஏற்படாததால் ராஜாமணி என்ற பெண்ணை

இரண்டாவது தாரமாக மணந்து அவர் மூலம் வாதி, பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்று துலக்கியிருப்பது உண்மையென்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. சுப்பன் செட்டியார் தன் ஜீவிய காலத்திலேயே வாதிக்கு ஜாதி ஆசாரப்படி நகைகள் போட்டு சீர் செனத்திகள் செய்து சிறந்த முறையில் விமர்சையாக திருமணம் நடத்தி வைத்தார். சுப்பன் செட்டியார் இறந்தபோது பாகப்பிரிவினை செய்யாமல் விட்டுவிட்டார் என்று துலங்கியிருப்பது முழுப்பொய்.

3.3) சுப்பன் செட்டியார் ஜீவியதசையில் உள்ளபோது, நல்ல சுயநினைவுடன் பிறர் தூண்டுதலின்றி மேற்படியாரும் அவரது முதல் மனைவி முத்துக்கருப்பாயி அம்மாளும் தங்கள் சுயார்ஜிதமாக பாடுபட்டு வாங்கிய பிராது சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளுக்கு தனித்தனி ஷெடியூல்களாக கண்டு 12.01.1981ம் தேதியில் ஒரு ரிஜிஸ்டர்டு உயில் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார். உயில் எழுதி வைத்த சுப்பன் செட்டியார் 1985ம் ஆண்டில் இறந்துவிட்டார். முத்துக்கருப்பாயி அம்மாளும் சிறிது காலம் சென்று இறந்து போனாள். அவர்கள் இறந்தவுடனேயே தாவா பிராதில் கண்டுள்ள சொத்துக்கள் உயிலில் கண்டுள்ள ஷரத்துக்களின்படி, 1, 2 பிரதிவாதிகளும் அடைந்து கொண்டு நாளது தேதி வரை எவ்வித வில்லங்கம் இடையூறு இல்லாத நிலையில் அனுபவித்து வருகிறார்கள். ஆகவே, Hindu Succession Act 1956 Testamentary Succession-க்கு applicable அல்ல. வாதி கோரும் 1/3 பாகம் எவ்விதத்திலும் கிடைக்கக் கூடியதில்லை.

3.4) பிராது 4(2) பாராவில் கண்டுள்ள விஷயங்கள் முற்றிலும் ஆட்சேபிக்கப்படுகின்றன. சுப்பன் செட்டியார் இறந்த பின்பு இந்து வாரிசுரிமைச் சட்டப்படி இந்த பிரதிவாதி குடும்ப கர்த்தா என்ற முறையில் சொத்துக்களை மேற்பார்த்து வருவதாக துலக்கியிருப்பது முழுப் பொய். பிராது சொத்துக்களுக்கும், வாதிக்கும் எவ்வித பாத்தியதையோ, அனுபவமோ கிடையாது. எந்தகாலத்திலும், பிராது சொத்துக்களில் போகவும் இல்லை. ஆகவே, Ouster படியும் வாதி

தன்னுடைய உரிமையை விவகாரத்திற்கு மட்டும் ஒப்புக்கொள்ளாமலேயே உண்டு என்று வைத்துக்கொண்டாலும் அதுவும் காலாவதி ஆகிவிட்டது. சுப்பன் செட்டியார் இறந்த 1985ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை வாதி எந்தவித உரிமையும் கோரவில்லை. இதற்கு மாறாக, 4(2) பாராவில் துலக்கப்பட்டுள்ள விஷயங்கள் முழுவதும் முழுப்பொய். கற்பனை. வாதியின் உரிமையை மோசம் செய்ய இந்தப் பிரதிவாதி 2ம் பிரதிவாதியுடன் கூடி பிறருக்கு விற்கப் போவதாக தெரிகிறது என்று துலக்கியிருப்பது முழுக் கற்பனை. அம்மாதிரி விற்க வேண்டிய அவசியம் இந்தப் பிரதிவாதிக்கு கிடையாது. விற்க விருப்பப்பட்டாலும் வாதிக்கு அதை ஆட்சேபணை செய்ய எவ்வித உரிமையுமில்லை. குறிப்பிட்டு எதுவும் சொல்லாமல் பிராது 11 அயிட்ட சொத்துக்களையும் விற்க முயற்சிப்பதாக துலக்கியிருப்பதிலிருந்து வாதியின் மோசக் கருத்து தெரிய வரும்.

3.5) பிராது 4(3) பாராவில் கண்டுள்ள விஷயங்கள் ஆட்சேபிக்கப்படுகின்றன. ஏதோ வாதி தன் பாகத்தை பிரித்துக் கொடுக்குமாறு பலமுறை நேரிடையாகவும் பஞ்சாயத்தாரையும் வைத்துக் கேட்டதாக துலக்கியிருப்பது கற்பனை. தேதியோ, வருஷமோ குறிப்பிடப்படவில்லை. தாவா வழக்கிற்காக கற்பனையாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. ஏதோ 24.12.2008ம் தேதியில் நாளிதழ்களில் விளம்பரம் கொடுத்த விபரம் இந்த பிரதிவாதிக்கு தெரியாது. ஆனால், 03.11.2008ம் தேதி வாதி தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய ரிஜிஸ்டர்டு நோட்டீஸிற்கு உண்மையான விஷயங்கள் கண்டு பதில் அறிவிப்பு கொடுத்திருக்கிறது. பதில் நோட்டீஸில் கண்டுள்ள விஷயங்களையும் இந்த ஸ்டேட்மெண்டின் ஒரு பாகமாக treat செய்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இதற்கு மாறாக, பிராது 4(4) பாராவில் கண்டுள்ள விஷயங்கள் ஆட்சேபிக்கப்படுகின்றன. வாதிக்கு Prima facie கேசும் கிடையாது. பதில் நோட்டீஸில் துலக்கப்பட்டிருக்கும் விஷயங்களைப் பற்றி வாதி பிராதில் எவ்வித விளக்கமும் கொடுக்கவுமில்லை. இந்த பிரதிவாதிக்கு வாதி

சகோதரி என்ற முறையில் பாசத்தினால் மேற்படியாரின் பெண் குழந்தைகள் பூப்பெய்ததற்கு மாமன் என்ற முறையில் சீர் செய்திருக்கிறார். இந்த பிரதிவாதி தனியாக 1990–ல் 299/4–ல் 67 செண்ட் கிரையம் வாங்கி வாதிக்கு கொடுத்திருக்கிறார். மேற்படி, நில விஷயமாய் வாதியின் நோட்டீஸில் துலக்கப்பட்டு உரிய முறையில் பதிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

3.6) பிராது 4(5)(6)–பாராக்களில் கண்டுள்ள விஷயங்கள் ஆட்சேபிக்கப்படுகின்றன. வாதி வீணாக கற்பனை செய்து கொண்டு எவ்வித முகாந்திரமுமில்லாமல் சொத்துக்கள் எதையும் விற்கவோ வேறு உரிமை கொடுக்கவோ கூடாது என்று Ad–interim injunction பரிகாரம் கேட்டிருப்பதாக துலக்கியிருப்பதும் நிலைநிற்கத்தக்கதில்லை. அதற்கு வாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது. வாதிக்கு எவ்வித வியாஜ்ஜிய மூலமும் கிடையாது. கண்டிருக்கும் வியாஜ்ஜிய மூலங்களும் பிசகு கற்பனை. எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) <u>2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

4.1) வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் சொல்லியுள்ள படி கூறியுள்ள உறவுமுறையான விபரங்களை தவிர மற்றவைகள் அனைத்தும் பொய்யானவைகள் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

4.2) வாதியை திருமணம் செய்து கொடுத்த சரியான விபரங்கள் 2ம் பிரதிவாதிக்கு தெரியாது. மேலும், வாதியை திருமணம் செய்து கொடுத்த பொழுது வாதிக்கு வாதியின் தாயார், தகப்பனார் என்னென்ன சீர் வரிசைகள் செய்தார்கள் என்று 2ம் பிரதிவாதிக்கு தெரியாது. வாதிக்கு சேர வேண்டிய பங்குகள் அனைத்தையும் முதல் பிரதிவாதி தன் கைவசம் வைத்துள்ளார். பிராதில் சொல்லியுள்ளபடி, தாவா சொத்துக்கள் அனைத்தும், பூர்வீக சொத்துக்களாகும். 2ம் வாதியின் தகப்பனார் சுப்பன் செட்டியார் முதல் மனைவியை திருமணம் செய்து கொண்டு குடும்பம்

நடத்தி வந்த நாளில், எந்த விதமான சட்டப்படியான வாரிசுகள் இல்லாததால் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். சுப்பன் செட்டியாரின் இரண்டாம் மனைவிக்கு பிறந்தவர்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளாகும்.

4.3) மேலும், 2ம் பிரதிவாதி பிறந்த தேதி 15.10.1977. எனவே, 2ம் பிரதிவாதிக்கு அவரது தந்தை சுப்பன் செட்டியார் மற்றும் சுப்பன் செட்டியார் முதல் மனைவி முத்துக்கருப்பாயி ஒரு உயில் எழுதி வைத்த விபரம் இதுவரை 2ம் பிரதிவாதிக்கு தெரியாது. உயில் சாசனமும், முதல் பிரதிவாதி வசம் தான் உள்ளது. தாவா சொத்தில் சில பகுதிகளை மட்டும் தான் 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். மற்ற சொத்துக்கள் அனைத்தையும் முதல் பிரதிவாதி தான் அனுபவித்துக் கொண்டு வருகிறார். தாவா சொத்தினுள் கிணறு ஒன்று உள்ளது. அக்கிணற்றில் இருக்கும் தண்ணீரையும் விவசாயத்திற்காக முதல் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் பயன்படுத்தி வருகிறார்கள். 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்களையும் முதல் பிரதிவாதி சிலருக்கு கிரையம் செய்து கொடுத்தும் அடமானமும் வைத்துள்ளார்கள். பலமுறை 2ம் பிரதிவாதி பாகப்பிரிவினை செய்து தருமாறு கேட்டு பஞ்சாயத்து வைத்து சொத்தை பாகப்பிரிவினை செய்யாமலும் பாகம் முறையாக கொடுக்காமலும் பாகம் பத்திரமும் பதிந்து கொடுக்காமலும் ஏமாற்றி வருகிறார். இதனால், 2ம் பிரதிவாதியால் முழுச் சொத்தில் அவருக்குரிய பாகத்தினை கூட அனுபவிக்க முடியவில்லை.

4.4) மேலும், வாதி தனது பிராதில் சொல்லியுள்ளதுபோல், 2ம் பிரதிவாதிக்குரிய சொத்தினை எந்தக் காலத்திலும் தர முடியாது என்று சொல்லவில்லை. 2ம் பிரதிவாதியிடம் வாதிக்குரிய சொத்து எதுவும் இல்லை. மேலும், வாதி ஒவ்வொரு சமயமும் தானும் முன் நின்று விவசாயம் செய்து வருகிறார் என்பது உண்மை. வாதிக்குரிய பங்கு 2ம் பிரதிவாதியிடம் இருப்பதால் அதனை வாதியே நிரூபிக்க

கடமைப்பட்டவர். வாதிக்குரிய பங்கை முதல் பிரதிவாதியுடன் அனுபவித்து வருகிறார். வாதியின் மகள் பூப்புனித நீராட்டு விழா மற்றும் இதர வைபவங்களுக்கு முதல் பிரதிவாதி எந்த விதமான சீர் வரிசைகளும் செய்யவில்லை. பலமுறை வாதி பங்கு கேட்டு முதல் பிரதிவாதியிடமும், 2ம் பிரதிவாதியிடம் பஞ்சாயத்து வைத்தார். மேற்படி, பஞ்சாயத்தார்களிடம் 2ம் பிரதிவாதி உண்மையினை தெரிவித்துவிட்டார். ஆக வாதிக்குரிய பங்கை முதல் பிரதிவாதி மட்டும் தான் தனது அனுபவத்தில் வைத்துள்ளார் என்பதும், தாவா சொத்து வாதிக்கு சேர வேண்டி பங்கு எதுவும் 2ம் பிரதிவாதிக்கு இல்லாத காரணத்தினால் 2ம் பிரதிவாதிக்கு, வாதி சட்டப்படியான அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை. வாதிக்கு சேர வேண்டிய சொத்து அனைத்தும் முதல் பிரதிவாதியிடமே உள்ளது. முதல் பிரதிவாதி தனது சொந்த சம்பாத்தியத்திலிருந்து சொத்து ஏதும் வாங்கவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீகச் சொத்துக்களாக உள்ளதால் வாதிக்குரிய பங்கு கிடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டால் சட்டப்படி செயல்பட 2ம் பிரதிவாதி தயாராக உள்ளார். எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

05.சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்

இவ்வழக்கில் வாதிகளின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் வாதி திருமதி. ஆ. மல்லிகா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் திரு. சிவலிங்கம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான திரு.சு. பழனியப்பன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியான திரு.வெ. துரைச்சாமி என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.17 மற்றும் பி.வா.சா.ஆ.19 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. எழுவினாக்கள்:–

1) Whether the will dated 12.01.1981 as stated in the written statement is true and valid?

2) Whether the court fee paid is correct?

3) Whether the plaintiff is entitled to the relief of partition as prayed for?

4) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction in respect of his share in the suit property as prayed for?

5) To what other reliefs the parties to the suit are entitled?

7.1) வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், தாவா சொத்து ஆதியில் சுப்பன் செட்டியார் அவர்களுக்கு பூர்வீக சொத்துக்கள் என்றும், சுப்பன் செட்டியார் முத்துக்கருப்பாயி என்பவரை திருமணம் செய்து அதன் பயனாக அவர்களுக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் ராஜாமணி என்பவரை இரண்டாவது திருமணம் செய்து மேற்படி ராஜாமணி என்பவருக்கு வாதியும், பிரதிவாதிகளும் வாரிசுதாரர்கள் என்றும், சுப்பன் செட்டியார் மறைவிற்கு பின்பு கூட்டுக் குடும்ப சொத்துக்களை 1ம் பிரதிவாதி அவருடைய பெயருக்கு வருவாய் ஆவணங்களை மாற்றிக் கொண்டுள்ளார் என்றும், கூட்டுக் குடும்ப சொத்து சம்பந்தமாக வாதி பாகம் பிரித்துக் கேட்டபோது, 1ம் பிரதிவாதி பாகம் பிரித்து கொடுக்க மறுத்து வருகிறார் என்றும், எனவே, வாதி தரப்பில் 03.11.2008ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பட்டது என்றும், 2ம் பிரதிவாதி வாதியின் பாகத்தை

பொறுத்து எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் வாதிக்குரிய பாகத்தை வழங்க தயாராக இருந்ததால் 2ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றும், 1ம் பிரதிவாதி அறிவிப்பைப் பெற்றுக் கொண்டு உண்மைக்கு மாறான சங்கதிகளுடன் 14.11.2008ம் தேதி பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், எனவே, வாதிக்குரிய 1/3 பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்துத் தரக் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.2) 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், வாதி மற்றும் பிரதிவாதிகளின் உறவு முறை ஒப்புக் கொள்ளப்படுகிறது என்றும், இருப்பினும், வாதி முன்னிறுத்துவதுபோல், தாவா சொத்து கூட்டுக் குடும்ப சொத்து கிடையாது என்றும், தாவா சொத்து சுப்பன் செட்டியார், முத்துக்கருப்பாயி ஆகியோர்களுக்கு தனித்துப் பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி, சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி இருவரும் சுய நினைவுடன் எவ்வித தூண்டுதலுமின்றி தங்கள் விருப்பத்தின்பேரில் 12.01.1981ம் தேதி பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் தாவா சொத்தைப் பொறுத்து எழுதி வைத்துள்ளார்கள் என்றும், மேற்படி, சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி இறப்பிற்கு பின்பு உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், மேலும், மேற்படி உயில் ஆவணத்திலேயே வாதிக்கு நல்ல முறையில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ள விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி, சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி இறப்பிற்கு பின்பு தாவா சொத்துக்களை வாதி மற்றும் 2ம் பிரதிவாதி அனுபவித்து அவர்கள் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் 1ம் பிரதிவாதி 01.03.1990ம் தேதி வாதிக்கு சில சொத்துக்களை கிரையம் வாங்கிக் கொடுத்துள்ளார் என்றும், சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி 12.01.1981ம் தேதி எழுதி வைத்த உயில் ஆவணம்

குறித்து எந்தவொரு பரிகாரமும் கோரமல், தாவா சொத்துக்கள் சுப்பன் செட்டியார், முத்துக்கருப்பாயி ஆகியோர்களுக்கு சுய சம்பாத்திய சொத்துக்களாக உள்ளபட்சத்தில் வாதி கோரும் பாகப் பிரிவினை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், எனவே, அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.3) வாதி தரப்பில், வாதி திருமதி. ஆ. மல்லிகா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். 03.11.2008ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக இரசீதுடன் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 14.11.2008ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 14.11.2008ம் தேதியிட்ட பத்திரிக்கை விளம்பரம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கேவியட் மனுவின் சார்பு நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார் மனுவின் உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்றவியல் பல்வகை மனு எண்.982−2009ல் ஏற்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்றவியல் பல்வகை மனு எண்.983−2009ல் ஏற்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் திரு. சிவலிங்கம் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் எந்தவித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

7.4) பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி திரு. பழனியப்பன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 12.01.1981ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் (ஆவண எண்.2/1981) பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19.07.1951ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.2246/1951) அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.08.1959ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.3151/1959) அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22.05.1972ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.1531/1972) அசல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 12.09.1975ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.3706/1975) அசல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 09.12.1980ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.3567/1980) அசல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பழனியப்பன் என்பவர் பெயரிலான பட்டா பாஸ் புத்தகம் அசல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மார்க்கண்டன் மற்றும் பழனியப்பன் ஆகியோர் பெயர்களிலான பட்டா பாஸ் புத்தகம் அசல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பழனியப்பன் என்பவர் பெயரிலான பட்டா பாஸ் புத்தகம் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 07.11.1994ம் தேதியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து வந்த கடிதம் அசல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 05.08.1986ம் தேதியில் தமிழ்நாடு மின் வாரியத்தால் வழங்கப்பட்ட இரசீது அசல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மின் கட்டண இரசீதுகள் எண்ணிக்கை இரண்டு பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கிஸ்தி இரசீதுகள் எண்ணிக்கை இரண்டு பி.வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டுவரி இரசீதுகள் எண்ணிக்கை இரண்டு பி.வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் வரி இரசீது அசல் பி.வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வெள்ளைச்சாமி என்பவரின் இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில், திரு. துரைச்சாமி என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.வா.சா.2 துரைச்சாமி என்பவரின் தந்தையின் வாரிசு சான்றிதழ் அசலோடு

ஒப்பீடு செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.2 துரைச்சாமி என்பவரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 23.06.2009ம் தேதியிட்ட வில் என்னும் உயில் சாசனம் (ஆவண எண்.9/2009) அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. எழுவினாக்கள் 1, 3 ற்கான தீர்வு :–

1) Whether the will dated 12.01.1981 as stated in the written statement is true and valid?

3) Whether the plaintiff is entitled to the relief of partition as prayed for?

8.1) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் இறந்துபோன சுப்பன் செட்டியார் என்பவர் முத்துக்கருப்பாயி என்பவரை முதலாவதாக திருமணம் செய்து அவருக்கு குழந்தைகள் பிறக்கவில்லை என்பதும், அதன்பின்பு வாதி மற்றும் பிரதிவாதியின் தாயான ராஜாமணி என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்பதும், மேற்படி, இரண்டாவது திருமணம் மூலம் வாதியும், 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் பிறந்துள்ளார்கள் என்பதும், இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

8.2) வாதியின் வழக்குப்படி, தாவா சொத்துக்கள் சுப்பன் செட்டியார் என்பவருக்கு பூர்வீகப் பாத்தியப்பட்ட சொத்து என்று வாதி தரப்பில் வாதிடப்படினும், அது குறித்து எந்தவொரு ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக, 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடும்போது, தாவா சொத்துக்கள் சுப்பன் செட்டியார் மற்றும் அவருடைய முதல் மனைவியான முத்துக்கருப்பாயி ஆகியோர்களுக்கு கிரைய ஆவணம் மூலம் தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், சுப்பன் செட்டியார் – முத்துக்கருப்பாயி ஆகியோர்களுக்கு கிரைய

ஆவணம் மூலம் தனித்துப் பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து 12.01.1981ம் தேதிய பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் 1, 2 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளனர் என்றும், சுப்பன் செட்டியார் – முத்துக்கருப்பாயி மறைவிற்கு பின்பு உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், எனவே, தாவா சொத்தில் பாகம் கோருவதற்கு வாதிக்கு உரிமை இல்லை என்றும் வாதிடப்பட்டது.

8.3) இது சம்பந்தமாக, பி.வா.சா.ஆ.1 ஆவணமானது 12.01.1981ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம், ஆவண எண்.2/1981–என்பது தெரிய வருகின்றது. மேலும், பி.வா.சா.ஆ.2 ஆனது சுப்பன் செட்டியார் பெயரில் உள்ள 19.07.1951ம் தேதி கிரைய ஆவணம், ஆவண எண்.2246/1951–என்பது தெரிய வருகின்றது. பி.வா.சா.ஆ.3 ஆனது சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி பெயரில் உள்ள 28.08.1959ம் தேதி கிரைய ஆவணம், ஆவண எண்.3151/1959–என்பது தெரிய வருகின்றது. பி.வா.சா.ஆ.4 ஆனது சுப்பன் செட்டியார் பெயரில் உள்ள 22.05.1972ம் தேதி கிரைய ஆவணம், ஆவண எண்.1531/1972–என்பது தெரிய வருகின்றது. பி.வா.சா.ஆ.5 ஆவணமானது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள 12.09.1975ம் தேதி கிரைய ஆவணம், ஆவண எண்.3706/1975–என்பது தெரிய வருகின்றது. பி.வா.சா.ஆ.6 ஆவணமானது, 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ள 09.12.1980ம் தேதிய கிரைய ஆவணம், ஆவண எண்.3567/1980–என்பது தெரிய வருகின்றது. பி.வா.சா.ஆ.7 ஆவணமானது, 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா (தனிப்பட்டா எண்.409) என்பது தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.8 ஆவணமானது, 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா (கூட்டுப்பட்டா எண்.1117) என்பது தெரிய வருகிறது. பி.வா.சா.ஆ.9 ஆவணமானது, 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா (தனிப்பட்டா எண்.831) என்பது தெரிய வருகிறது.

8.4) இந்த வழக்கில் வாதி தரப்பில் தாவா சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ள

சொத்துக்களானது, சுப்பன் செட்டியாருக்கு பூர்வீக சொத்துக்கள் என்று வாதிடும்பட்சத்தில் தாவா சொத்துக்கள் சம்பந்தப்பட்ட எந்தவொரு ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்துள்ள நிலையில், வாதியின் வழக்கை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது வாதியையே சாரும். ஆனால், தாவா சொத்துக்கள் சுப்பன் செட்டியாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பது சம்பந்தமாகவும் அல்லது தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

8.5) மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையான ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, கீழ்க்கண்ட விவரங்கள் தெரிய வருகிறது.

8.6) பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது இறந்துபோன சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி ஆகியோர்களால் 1, 2 பிரதிவாதிகளுக்கு 12.01.1981ம் தேதியில் எழுதி வைக்கப்பட்டுள்ள உயில் ஆவணம் என்பது தெரிய வருகின்றது. மேற்படி, உயில் ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி, ஆவணத்தின் A ஷெட்டியூல் சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கும், B ஷெட்டியூல் சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கும் எழுதப்பட்டுள்ளது தெரிய வருகின்றது.

8.7) பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 19.07.1951ம் தேதிய சுப்பன் செட்டியார் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்பது தெரிய வருகின்றது. மேற்படி, ஆவணத்தில் சொத்து விவரமாக ரீசர்வே எண்.298/7– ஏக்கர் 1, செண்ட் 25 என காண்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. அதாவது, தாவா A ஷெட்டியூல் 9வது இலக்க சொத்தைப் பொறுத்து சுப்பன் செட்டியார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.2 என்பது தெரிய வருகிறது.

8.8) பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 28.08.1959ம்

தேதிய சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்பது தெரிய வருகின்றது. மேற்படி, ஆவணத்தில் சொத்து விவரமாக சர்வே எண்.298/3–செண்ட் 24, சர்வே எண்.299/2–செண்ட் 67 மற்றும் சர்வே எண்.299/3–ஏக்கர் 1, செண்ட் 15 என காண்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. அதாவது, தாவா A ஷெட்டியூல் 1வது இலக்க சொத்து, 2ம் இலக்கச் சொத்து, 3ம் இலக்கச் சொத்து ஆகியவற்றைப் பொறுத்து சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி பெயரில் உள்ள கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.3 என்பது தெரிய வருகிறது.

8.9) பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 22.05.1972ம் தேதிய சுப்பன் செட்டியார் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்பது தெரிய வருகின்றது. மேற்படி, ஆவணத்தில் சொத்து விவரமாக ரீசர்வே எண்.88/4–ஏக்கர் 1, செண்ட் 75 என காண்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. அதாவது, தாவா B ஷெட்டியூல் 2வது இலக்க சொத்தைப் பொறுத்து சுப்பன் செட்டியார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.4 என்பது தெரிய வருகிறது.

8.10) பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 12.09.1975ம் தேதிய பழனியப்பன் (1ம் பிரதிவாதி) பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்பது தெரிய வருகின்றது. மேற்படி, ஆவணத்தில் சொத்து விவரமாக ரீசர்வே எண்.83/1E–ல் ஏக்கர் 3, செண்ட் 27 ஸ்தலத்தில் மேல்புறம் ஏக்கர் 1, செண்ட் 94 என காண்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. அதாவது, தாவா B ஷெட்டியூல் 1வது இலக்க சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி பழனியப்பன் பெயரில் கார்டியன் நிலையில், சுப்பன் செட்டியார் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.5 என்பது தெரிய வருகிறது.

8.11) பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 09.12.1980ம் தேதிய பழனியப்பன் (1ம் பிரதிவாதி) மற்றும் மார்க்கண்டன் (2ம் பிரதிவாதி)

ஆகியோர் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்பது தெரிய வருகின்றது. மேற்படி, ஆவணத்தில் சொத்து விவரமாக சர்வே எண்.298/1B– செண்ட் 54, சர்வே எண்.298/4–செண்ட் 87 மற்றும் சர்வே எண்.298/5–செண்ட் 65 என காண்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. அதாவது, தாவா A ஷெட்டியூல் 5வது இலக்க சொத்து, 7வது இலக்கச் சொத்து, 8வது இலக்கச் சொத்து ஆகியவற்றைப் பொறுத்து 1ம் பிரதிவாதி பழனியப்பன் பெயரிலும், 2ம் பிரதிவாதி மார்க்கண்டன் என்பவருக்கு கார்டியன் நிலையில், அவரது தாயாரான ராஜாமணி அம்மாள் என்பவரும் கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.6 என்பது தெரிய வருகிறது.

8.12) அதாவது, பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 ஆவணங்களின்படி, இறந்துபோன சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி அம்மாள் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.6 – 1, 2 பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ள கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி ஆகியோர்களால் 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

8.13) மேலும், உயில் ஆவணம் எழுதி வைத்த சுப்பன் செட்டியார் 1985ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், அதன்பின்பு, முத்துக்கருப்பாயி என்பவரும் இறந்துவிட்டார் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி விவரங்கள் வாதி தரப்பில் மறுக்கப்படவில்லை.

8.14) மேலும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"1981ம் வருடம் ஜனவரி மாதம் 12ம் தேதிக்கு தமிழ் ரௌத்திரி வருடம் மார்கழி மாதம் 28ம் தேதி மதுரை ஜில்லா மேலூர் தாலுகா எட்டிமங்கலம் கிராமம்

சேகரம் எ. சுந்தரராஜபுரத்திலிருக்கும் மந்தைக் கருப்பன் செட்டியார் குமாரர் விவசாயம் சுமார் 60 வயதுள்ள ம. சுப்பன் செட்டியார் 1, ஷை 1வது நபரின் மூத்த மனைவி விவசாயம் சுமார் 55 வயதுள்ள முத்து கருப்பாயி – 2, ஆகிய நாங்கள் இருவரும் சுதாவிலும், சுய நினைவுடனும் இது ஊர்ஜிதத்திற்கு வர வேண்டுமென்கிற நல்ல எண்ணத்துடன், ஷையூரிலிருக்கும் சுப்பன் செட்டியார் குமாரர் விவசாயம் சு. பழனியப்பன் –1, ஷை 1வது நபரின் கூடப்பிறந்த தம்பி மைனர் மார்க்கண்டனுக்குக் கார்டியன் ஷை மைனரின் தாயாரும் ஷை சுப்பன் செட்டியாரின் இரண்டாவது மனைவியுமான ராஜாமணியம் மான் ஷை மைனருக்குக் கார்டியன்ஸ்தானத்தில் 2 இந்த இரண்டு பேர்களுக்கும் எழுதி வைத்த உயில் சாசனம்.

இதனடியில் கண்ட சொத்துக்கள் பெரும் பகுதி எங்களுடைய சுய முயற்சியாலும் சொந்தமாகச் சம்பாதித்து வாங்கப்பட்டவைகளாகும். நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தியதில் எங்களுக்கு எவ்வித வாரிசுகளும் ஏற்படவில்லை. பிறகு எங்களில் 1வது நபரான சுப்பன் செட்டியாருக்கு இரண்டாவது மனைவியாக ராஜாமணியம்மாளை திருமணம் செய்து நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இருந்து வாழ்க்கை நடத்தி வந்தோம். மேல்கண்ட 1வது நபருக்கும், ராஜாமணியம்மாளுக்கும், மல்லிகா என்ற பெண்ணும், பழனியப்பன், மார்க்கண்டன் என்கிற பையன்களும் உள்ளனர். இவர்களில் மல்லிகா என்கிற பெண்ணை கொட்டாம்பட்டியிலுள்ள ஆறுமுகம் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்து அதற்குப் போட வேண்டிய நகைகள், சீர், சீராட்டுகள் செய்தும் சீர்தனம் கொடுத்தும், மல்லிகா கணவருடன் சுகமாக வாழ்க்கை நடததி வருகிறாள். நாங்கள் சிரமப்பட்டு சம்பாதித்து வைத்துள்ள சொத்துக்களை எங்களுடைய ஆயுளுக்குப் பின் அடைந்து கொள்வதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டும். எங்களுடைய ஆயுள் உள்ளபோதே ஒரு

ஏற்பாடு செய்யக் கருதியும், மனித காயம் நிலையற்றதாலும், எங்கள் இருவருக்கும் வயதாகிற காரணத்தினலும் இந்த உயில் சாசனம் மூலம் உங்கள் இருவருக்கும் அடியிற்கண்ட சொத்துக்களைப் பாத்தியப்படுத்திக் கொடுத்திருப்பதால் இதனடியில் கண்ட A. ஷெடியூல் சொத்துக்களை எங்களுடைய ஆயுளுக்குப் பின் உங்களில் 1வது நபரான சு. பழனியப்பன் சர்வ சுதந்திரப் பாத்தியமாகவும், புத்திர பௌத்திர பரம்பரையாகவும், தானாதி வினியோகம் விற்கிரையம் முதலியவைகளுக்கு யோக்கியமாகவும், ஆண்டனுபவித்து வரவேண்டியது. இதனடியில் கண்ட B. ஷெடியூல் சொத்துக்களை எங்களுடைய ஆயுளுக்குப் பின் மைனர் மார்க்கண்டன் மேஜராகாமலிருந்தால் வையான் மேஜருககும் வரை கார்டியன் எவ்வித பந்தக பபாரதீன மன்னியில் மேல் பார்த்து வந்து மைனர் மேஜரானவுடன் சர்வ சுதந்திரப் பாத்தியமாகவும் புத்திர பௌத்திர பாரம்பரையாகவும் தானுதி வினியோகம் விற்கிரையம் முதலியவைகளுக்கு யோக்கியமாகவும் ஆண்டனுபவித்துக் கொள்ள வேண்டியது. இந்த உயில் எங்களுடைய ஆயுளுக்குப் பின் ஊர் ஜிதத்திற்கு வர வேண்டியது. இதை எங்களுடைய ஆயுளுக்கு மாற்றவும் ரத்துச் செய்யவும் எங்களுக்கு அதிகாரம் உண்டு."

8.15) அதாவது, பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில், இந்த வழக்கின் வாதியான மல்லிகா என்பவரை கொட்டாம்பட்டியிலுள்ள ஆறுமுகம் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்து அவருக்கு போட வேண்டிய நகைகள், சீர், சீராட்டுகள் செய்தும் சீதனம் கொடுத்தும், மல்லிகா கணவருடன் சுகமாக வாழ்க்கை நடத்தி வருகிறாள் என்று குறிப்பிட்டு உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து A ஷெட்டியூல் சொத்துக்கள் 1ம் பிரதிவாதியும், B ஷெட்டியூல் சொத்துக்கள் 2ம் பிரதிவாதியும் அடைந்து அனுபவித்து வர வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8.16) உயில் ஆவணம் எழுதிய சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி

அம்மாள் ஆகியோர்கள் இறந்துவிட்டனர் என்று வாதி தரப்பில் மறுக்கப்படாத நிலையில், உயில் ஆவணம் எழுதி வைத்த சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி இறப்பிற்கு பின்பு உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்ற 1ம் பிரதிவாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலேயே உள்ளது.

8.17) மேலும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி, நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலனை செய்து பார்க்கும்போது, பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணமாக இருந்தாலும் கூட அது எவ்வாறு நிரூபிக்கப்பட வேண்டும் என்று இந்திய சாட்சிய சட்டம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Section 68. Proof of execution of document required by law to be attested.**

If a document is required by law to be attested, it shall not be used as evidence until one attesting witness at least has been called for the purpose of proving its execution, if there be an attesting witness alive, and subject to the process of the Court and capable of giving evidence :[Provided that it shall not be necessary to call an attesting witness in proof of the execution of any document, not being a Will, which has been registered in accordance with the provisions of the Indian Registration Act, 1908 (XVI of 1908), unless its execution by the person by whom it purports to have been executed is specifically denied.]

**Section 69. Proof where no attesting witness found.**

If no such attesting witness can be found, or if the document purports to have been executed in the United Kingdom, it must be proved that the attestation of one attesting witness at least is in his handwriting, and that the signature of the person executing the document is in the handwriting of that person.

**Section 71. Proof when attesting witness denies the execution.**

If the attesting witness denies or does not recollect the execution of the document, its execution may be proved by other evidence.

8.18) இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில், சாட்சி கையெழுத்து செய்துள்ள ராசு என்ற முத்துக்கருப்பன், வெள்ளைச்சாமி மற்றும் ஆவணத்தை எழுதிய வீரணன், பெரியணன் மற்றும் சின்னக் கருப்பன் ஆகியோர்களுக்கு சாட்சி சம்மன் அனுப்பக் கேட்டு I.A.No.2/2019–என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு மீது 26.06.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், ராசு என்ற முத்துக்கருப்பன், வெள்ளைச்சாமி, வீரணன், பெரியணன் மற்றும் சின்னக் கருப்பன் ஆகியோருகளுக்கு சாட்சி சம்மன் அனுப்பப்பட்டு ராசு என்ற முத்துக்கருப்பன், வீரணன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்ற குறிப்புடன் திரும்பி வந்துள்ளது. மேலும், வெள்ளைச்சாமி என்பவர் இறந்துவிட்டார் என்று அவரது மகனான துரைச்சாமி என்பவர் தெரிவித்துள்ளார்.

8.19) எனவே, வெள்ளைச்சாமி என்பவரது மகனான துரைச்சாமி என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பி.வா.சா.2 தனது சாட்சியத்தில், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் தனது தந்தையுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார். அதாவது, பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள ராசு என்ற முத்துக்கருப்பன், வெள்ளைச்சாமி மற்றும் உயில் ஆவணத்தை எழுதிய வீரணன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்ற குறிப்புடன் சாட்சிய சம்மன் திரும்பி வந்துள்ள நிலையில், உயில் ஆவணத்தில் சாட்சிக் கையெப்பமிட்ட ராசு என்ற முத்துக்கருப்பன் என்பவரது மகனான துரைச்சாமி என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு உயில் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி

கையொப்பம் தன்னுடைய தகப்பனாருடையது என சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 68, 69, 71–ன்படி, பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் 1ம் பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

8.20) அடுத்ததாக, பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5, பி.வா.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் சுப்பன் செட்டியார், முத்துக் கருப்பாயி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தனித்து கிரையமாக வாங்கப்பட்ட சொத்துக்களுக்கான ஆவணங்கள் என தெரிய வரும் நிலையில், வாதி தரப்பில் தாவா சொத்து சுப்பன் செட்டியாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பது சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படாத நிலையில், தாவா சொத்துக்கள் சுப்பன் செட்டியாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்ற வாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

8.21) அடுத்ததாக, 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடும்போது, வாதி தரப்பில் 1ம் பிரதிவாதிக்கு 03.11.2008ம் தேதிய வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு 1ம் பிரதிவாதி தரப்பில் 14.11.2008ம் தேதிய பதிலறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், மேற்படி பதிலறிவிப்பில் பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் குறித்து விவரமாக தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும், இருப்பினும், நான்கு ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் சம்பந்தமாக எந்தவொரு பரிகாரமும் கோராமல் பாகப் பிரிவினை கேட்டு வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.

8.22) இது குறித்து வா.சா.ஆ.3 – 14.11.2008ம் தேதிய பதிலறிவிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"சுப்பன் செட்டியார் இறப்பதற்கு 4 ஆண்டுகள் முன்பே 12.01.1981 ஷ சுப்பன் செட்டியாரும் அவருடைய மூத்த மனைவி முத்துக்கருப்பாயி இரண்டு பேர்களும் சுய நினைவுடன் பிறர் தூண்டுதலின்றி ஒரு ரிஜிஸ்டர் உயில்சாசனம் எழுதியுள்ளார். அதில் உங்கள் கட்சிக்காரி நம் கட்சிக்காரர் அவர் தம்பி பாண்டி என்ற மார்க்கண்டன் தன் இளைய தாரம் ராஜாமணி அம்மாளின் குழந்தைகள் என்றும் ஷ உயிலில் கண்டுள்ள சொத்துக்கள் முழுமையும் சுப்பன் செட்டியார், முத்துக்கருப்பாயி ஆகியோரின் சுய முயற்சியாலும், உழைப்பினாலும் சொந்தமாக சம்பாதித்து வாங்கப்பட்டவைகள் என்று வியக்தமாக துலக்கப்பட்டுள்ளது என்றும், உங்கள் கட்சிக்காரிக்கு நகைகள் சீர் சீராட்டுகள் செய்தும், ஸ்ரீதனம் கொடுத்தும் மல்லிகா கணவனுடன் வாழ்க்கை நடத்தி வருகிறாள் என்றும், துலக்கப்பட்டு உள்ளது. மேலும், சுப்பன் செட்டியார் சொத்துக்களை ஏ ஷெடியூலில் துலக்கியிருப்பதை நம் கஷிக்காரருக்கும் பி ஷெடியூலில் கண்டுள்ளதை பாண்டி என்ற மார்க்கண்டனுக்கும் காண்பித்துள்ளார் என்றும், 1985ம் சுப்பன் செட்டியார் இறந்த பின்பு உயில் சாசனம் உடனே அமலுக்கு வந்ததில் நம் கட்சிக்காரரும் அவருடைய தம்பியும் அவரவர்கள் அடைந்து கொண்டு பட்டாக்கள் மாற்றியும் தனித்தனியே சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், முழுவிபரமும் உங்கள் கட்சிக்காரிக்கு தெரிந்து இருந்தும் சுப்பன் செட்டியார் இறந்து 23 ஆண்டுகளுக்கு மேலாக சும்மா இருந்துவிட்டு தற்சமயம் நோட்டீஸ் விடச்செய்திருப்பதிலிருந்து உங்கள் கட்சிக்காரியின் மோசக்கருத்து தெரியவரும் என்றும்," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8.23) அதாவது, வா.சா.ஆ.3 பதிலறிவிப்பில், சுப்பன் செட்டியார் இறப்பதற்கு 4 ஆண்டுகள் முன்பே 12.01.1981 சுப்பன் செட்டியாரும் அவருடைய மூத்த மனைவி முத்துக்கருப்பாயி இரண்டு பேர்களும் சுய நினைவுடன் பிறர் தூண்டுதலின்றி ஒரு ரிஜிஸ்டர் உயில்சாசனம் எழுதியுள்ளார் என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ள

நிலையில், வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 12.01.1981ம் தேதிய உயில் ஆவணம் சம்பந்தமாக எந்தவொரு பரிகாரமும் கோரப்படவில்லை.

8.24) இது சம்பந்தமாக வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "என் தகப்பனார் உயிருடன் இருந்தார். சீர்வரிசை செய்தார்களா என்றால் செய்தார்கள். என் ஊரில் நடக்கும் விசேசங்களுக்கு வந்து செல்வோமா என்றால் வந்து செல்வேன். அப்போது ஊரில் நடக்கும் விஷயங்களை தெரிந்து கொள்வேன். என் தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் முத்துக்கருப்பாயி அம்மாள், இரண்டாவது மனைவி பெயர் ராஜாமணி ஆகும். நானும், பிரதிவாதியும் 2ம் மனைவிக்குப் பிறந்தவர்கள் என்றால் சரிதான். முதல் மனைவிக்கு குழந்தைகள் இல்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.25) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்குரிய பட்டாவில் பிரதிவாதியின் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.26) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "நான் வழக்கறிஞர் அறிவிப்பு 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தான் அனுப்பினேன் என்றாலும், 2ம் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றாலும், இரண்டு பேருக்குமே அனுப்பினேன். தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தான் அனுப்பினேன் என்றாலும், 2ம் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. 2008ல் தாவா சொத்து தொடர்பாக கேவியட் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால், வழக்கு 4 வருடம் கழித்து 2012ல்

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி மூன்று வருடம் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து நஞ்சையா, புஞ்சையா என்று தெரியாது என்றால் 9 ஏக்கர் நஞ்சை மற்றும் 2–3/4–ஏக்கர் புஞ்சை ஆகும். என் தகப்பனார் எழுதி வைத்த உயில் சம்பந்தமாக நான் ஆட்சேபணை எதுவும் செய்தேனா என்றால் உயில் எழுதி வைத்தது தெரியாது. உயில் பற்றி எனக்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் தெரியாது. அந்த பதில் அறிவிப்பின் அடிப்படையில், உயில் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. உயிலை ரத்து செய்யுமாறு எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் உயில் மோசடியானது என்று ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.27) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவா சொத்துக்களின் மதிப்பு முப்பது லட்சம் இருக்குமா என்றால் ஐம்பது லட்சம் இருக்கும். தாவா சொத்தை முறையாக மதிப்பீடு செய்து வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8.28) மேலே கண்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் சம்பந்தமாக வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேலும், வழக்குரை மற்றும் வா.சா.1 குறுக்கு விசாரணையின்படி, பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் சம்பந்தமாக எந்தவொரு பரிகாரமும் வாதி தரப்பில், இந்த வழக்கில் கோரப்படவில்லை என்பது தெரிய வருகின்றது. எனவே, வா.சா.ஆ.3 பதிலறிவிப்பில் உயில் ஆவணம் சம்பந்தமாக தெரிவிக்கப்பட்ட பின்பும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உயில் ஆவணம் சம்பந்தமாக எந்தவொரு பரிகாரமும் கோரப்படவில்லை

என்ற 1ம் பிரதிவாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலேயே உள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

8.29) மேலே கண்டவற்றை பரிசீலனை செய்து பார்க்கும்போது, பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 ஆவணங்களின்படி, இறந்துபோன சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி அம்மாள் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.6 – 1, 2 பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ள கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி ஆகியோர்களால் 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், சுப்பன் செட்டியார் 1985ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், அதன்பின்னிட்டு முத்துக்கருப்பாயி இறந்துவிட்டார் என்றும், 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடும் வாதம் வாதியால் மறுக்கப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்திட்டுள்ள ராசு என்ற முத்துக்கருப்பன், வெள்ளைச்சாமி மற்றும் உயில் ஆவணத்தை எழுதிய வீரணன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்ற குறிப்புடன் சாட்சிய சம்மன் திரும்பி வந்துள்ள நிலையில், உயில் ஆவணத்தில் சாட்சிக் கையெப்பமிட்ட ராசு என்ற முத்துக்கருப்பன் என்பவரது மகனான துரைச்சாமி என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு உயில் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடைய தகப்பனாருடையது என சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 68, 69, 71–ன்படி, பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் 1ம் பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், பி.வா.சா.ஆ.1 ஆவணம் சம்பந்தமாக வா.சா.ஆ.3 பதிலறிவிப்பிலேயே 1ம் பிரதிவாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அது சம்பந்தமாக எந்தவொரு பரிகாரமும்

வாதி தரப்பில் கோரப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்த வழக்கில் வாதி கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினா 1யைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது. எழுவினா 3யைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

<u>9. எழுவினா 2ற்கான தீர்வு</u> :

2) Whether the court fee paid is correct?

9.1) இந்த வழக்கில் பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 ஆவணங்களின்படி, இறந்துபோன சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி அம்மாள் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.6 – 1, 2 பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ள கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி ஆகியோர்களால் 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து அல்ல என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், எழுவினா 2யைப் பொறுத்து எந்தவொரு முடிவும் செய்யப்பட வேண்டியதல்ல என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

<u>10. எழுவினா 4ற்கான தீர்வு</u> :

4) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction in respect of his share in the suit property as prayed for?

10.1) இந்த வழக்கில் பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 ஆவணங்களின்படி, இறந்துபோன சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி அம்மாள் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.6 –

1, 2 பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ள கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்தும், பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது சுப்பன் செட்டியார் மற்றும் முத்துக்கருப்பாயி ஆகியோர்களால் 1, 2 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து அல்ல என்றும், தாவா சொத்தில் வாதிக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், எழுவினா 4யைப் பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினா 4யைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

<u>11. எழுவினா 5ற்கான தீர்வு</u> :

5) To what other reliefs the plaintiff is entitled for?

எழுவினா 1-யைப் பொறுத்து பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினாக்கள் 2, 3, 4 ஆகியவற்றைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று எழுவினா 5-யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM
Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.03.26 17:56:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

1.வா.சா.1 – திருமதி. ஆ. மல்லிகா

2.வா.சா.2 – திரு. சிவலிங்கம்

வாதி தரப்பு சான்றாவணங்கள் :

| வாதி தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.11.2008 | வழக்கறிஞர் அறிவிப்பு. | அலுவலக நகல். |
| வா.சா.ஆ.2 | ---------- | அஞ்சலக ஒப்புகை அட்டை. | அசல் |
| வா.சா.ஆ.3 | 14.11.2008 | வழக்கறிஞர் அறிவிப்பு. | அசல். |
| வா.சா.ஆ.4 | 14.11.2008 | பத்திரிக்கை விளம்பரம். | அசல். |
| வா.சா.ஆ.5 | ---------- | கேவியட் மனு. | சார்பு நகல். |
| வா.சா.ஆ.6 | ---------- | புகார் மனு. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.7 | ---------- | குற்றவியல் பல்வகை மனு எண்.982–2009ல் ஏற்பட்ட உத்தரவு | உண்மை நகல். |
| வா.சா.ஆ.8 | ---------- | குற்றவியல் பல்வகை மனு எண்.983–2009ல் ஏற்பட்ட உத்தரவு | உண்மை நகல். |

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :

1. பி.வா.சா.1 – திரு.சு. பழனியப்பன்
2. பி.வா.சா.2 – திரு.வெ. துரைச்சாமி

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :

| பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 12.01.1981 | பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம். (ஆவண எண்.2/1981) | அசல். |
| பி.வா.சா.ஆ.2 | 19.07.1951 | கிரைய ஆவணம். (ஆவண எண். 2246/1951) | அசல். |
| பி.வா.சா.ஆ.3 | 28.08.1959 | கிரைய ஆவணம். (ஆவண எண்.3151/1959) | அசல். |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.4 | 22.05.1972 | கிரைய ஆவணம். (ஆவண எண்.1531/1972) | அசல். |
| பி.வா.சா.ஆ.5 | 12.09.1975 | கிரைய ஆவணம். (ஆவண எண். 3706/1975) | அசல். |
| பி.வா.சா.ஆ.6 | 09.12.1980 | கிரைய ஆவணம். (ஆவண எண்.3567/1980) | அசல். |
| பி.வா.சா.ஆ.7 | --------- | பழனியப்பன் என்பவர் பெயரிலான பட்டா பாஸ் புத்தகம். | அசல். |
| பி.வா.சா.ஆ.8 | --------- | மார்க்கண்டன் மற்றும் பழனியப்பன் ஆகியோர் பெயர்களிலான பட்டா பாஸ் புத்தகம் | அசல். |
| பி.வா.சா.ஆ.9 | --------- | பழனியப்பன் என்பவர் பெயரிலான பட்டா பாஸ் புத்தகம் | அசல். |
| பி.வா.சா.ஆ.10 | 07.11.1994 | தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து வந்த கடிதம் | அசல். |
| பி.வா.சா.ஆ.11 | 05.08.1986 | தமிழ்நாடு மின் வாரியத்தால் வழங்கப்பட்ட ரசீது. | அசல். |
| பி.வா.சா.ஆ.12 | --------- | மின் கட்டண இரசீதுகள் (எண்ணிக்கை இரண்டு). | அசல். |
| பி.வா.சா.ஆ.13 | --------- | கிஸ்தி இரசீதுகள் (எண்ணிக்கை இரண்டு). | அசல். |
| பி.வா.சா.ஆ.14 | --------- | வீட்டுவரி இரசீதுகள் (எண்ணிக்கை இரண்டு). | அசல். |
| பி.வா.சா.ஆ.15 | --------- | தண்ணீர் வரி இரசீது. | அசல். |
| பி.வா.சா.ஆ.16 | --------- | வெள்ளைச்சாமி என்பவரின் இறப்பு சான்றிதழ். | அசல். |
| பி.வா.சா.ஆ.17 | --------- | பி.வா.சா.2 துரைச்சாமி | அசலோடு ஒப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | | என்பவரின் தந்தையின் வாரிசு சான்றிதழ் | செய்யப்பட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.18 | --------- | பி.வா.சா.2 துரைச்சாமி என்பவரின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.19 | 23.06.2009 | உயில் ஆவணம். (ஆவண எண்.9/2009) | அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட நகல். |

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.03.26 17:57:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்
அசல் வழக்கு எண். 111/2012
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் 26.03.2026